உ

# ஸ்ரீ தாமிர்த சாரம்.

இதில் ஸ்ரீமத்பழனிமலையிலெழுந்தருளிய
சிவசுப்பிரமணியக்கடவுள்பேரில்
சிவபஜனைக ளடங்கியிருக்கின்றன.

## திருப்போரூர்

## டி. கோபால் நாயகர்

அவர்களாற்றமது

மதராஸ், என். சி.
கோள்டன் அச்சியந்திரசாலையிற்
பதிப்பிக்கப்பெற்றது.

1914.

17-18 காளத்தியப்ப முதலிவீதி மதராஸ் என். சி.

120

# விளம்பரம்.

## சாதகாலங்காரம்,

### மூலமும் - உரையும்.

—— *) ——

இச் சென்னையின்கண் முன்னோர்கள் அருளிச்செய்த பல சோதிட நூல்கள் உள்ளன. அவற்றுள் இரண்டொரு நூற்களே மிக்க பயன்படத்தக்கவைகளும், வரிசைக்கிரமமாகச் செய்யப்பட்டவையுமாகும். அப்படிப்பட்டவற்றுள் சாதகாலங்காரம் என்பதுஒன்று அதற்கு இதுவரைக்கும் உரையில்லாத பெருங்குறையை நோக்கிப் பலரும் என்னை வற்புறுத்தியபடியால் அதற்குத் தக்கவாறு உரையெழுதி பன்னிரண்டு பாகங்களும் நன்றாய் விளங்கும்படி விளக்கி அச்சிட்டிருக்கின்றோம். வேண்டியவர்கள் எம்மிடத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

இதன் விலை ரூபா 1 8 0

கடவுள் துணை.

# கீதாமிர்தசாரம்.

———(*)———

ஜாவளி-இராகம்-பியாக்-தாளம்-ரூபகம்.

கந்தநாதா யிந்தவேளை
கருணைசெய்யவேணுமே. (கந்த)

தொந்தமுடைய பந்தவிடைய
துன்பத்தெழுந்தி வெம்பினேன்
சிந்தைதெளிவ தெந்தவகையின்
செம்பொற்பாத நம்பினேன். (கந்த)

பண்டுகருது தொண்டர்தமது
பாவந்தீர்க்க வல்லையா
அண்டுமெளிமை கண்டுமெனையா
ளாததென்ன சொல்லையா. (கந்த)

சோதிப்பது காதிப்படிக்கை
சோரவிடு தன்னீதியோ
ஏதித்தனையென் மீதிற்கொடுமை
யேழைநான் விரோதியா. (கந்த)

மதுரமாக மாம்பழஞ்சொன்
மகிழ்குஞ்சரி மனோகரா
மதுமமாது நிதம்முலாவு
பழனிமலை க்ருபாகரா. (கந்த)

இராகம்-மோகனம்-கல்யாணி-தாளம்-சாப்பு.

பல்லவி.

என்முகம் பார்த்தருளையா-நான்
ஏழையுனக்கடிமை யென்பதும்பொய்யா.

அநுபல்லவி

வன்மமென்னபழனி மலைமுருகோனே
வகையொன்றுந்தெரியாமல் வாடுகிறேனே. (என்)

சண்டாளனிவனென்று தள்ளாதேயென்னைத்
தண்டாயுதாநீயன்றித் திக்குண்டோபின்னை (என்)

தவறெத்தனைசெய்திருந் தாலுமிங்குடனே
யவைமுற்றுமனம்பொறுத் தாள்வதுன்கடனே. (என்)

வருத்துதேயடிக்கடி மாயாவிகாரந்
திருத்தியூள்வினைவலி தீர்த்திந்தநேரம் (என்)

ஒன்றுவிரண்டாசும்மா வோயாததுன்ப
மென்றுவினியெந்தநா ளெய்துவதின்பம் (என்)

மாம்பழந்தமிழ்புனை வள்ளிசமேதா
பூம்பாதந்தொழுநெறி புகலலாகாதா (என்)

இராகம்-செஞ்சுருட்டி-தாளம்-ஆதி.

பல்லவி.

வா வா வா பொன்
மயூரமீதி லென்முன்-வா

அநுபல்லவி.

தேவாதிதேவா பழனித்
தெண்டாயுதபாணி யென்முன் (வாவா)

சரணங்கள்.

நன்னிலைகாணுதலைந்த நான்மிகவுமட்டி
யென்னினுநீயா ளொண்ணுதா
வென்னவினியட்டி யென்முன் (வாவா)

பாதவர்ச்சனைசெய்யாத பாவியேனைனலும்
ஆதரிககவேணுந்தவ
ருதேயொருகாலு மென்முன் (வாவா)

எத்தனைசொன்னலுநெஞ் சிரக்கம்யிராதா
கத்தநிவிஷ்யசிற்
சொரூபனந்த போகாவென்முன் (வாவா)

தஞ்சமுனையன்றியில்லாத தாமசமேனப்பா
அஞ்சலென்றிட லாகாதா
வத்தனைவெறுப்பா யென்முன் (வாவா)

வள்ளிதெய்வானைவிழி வண்டுநுகர்தேனே
தெள்ளியகவி மாம்பழந்
தியானிக்கும்பெம்மானே யென்முன் (வாவா)

இராகம்-பீய்-அல்லது-பியாக்-தாளம்-ஆதி.

பல்லவி.

ஆதரித்தெனையினி யாண்டருள்வாயே
அசட்டைசெய்வது நீதியலநீயே.

அநுபல்லவி.

மாதவத்தவரும் பூதலத்தெவரும்
வழுத்தும்பழனி மலைவடிவேலா
சாதனைத்தொழிலேனோ சோதனைக்கெதிர்நானோ
சரிவள்ளிதெய்வ குஞ்சரிலோலா (ஆதரி)

கனவினுந்தாயி மனமெனும்பாவி
கலங்குவதுகொஞ்ச மேகனதொல்லை
வனசமும்பொருவாத வனதுரஞ்சிதபாத
வணக்கத்துக்கிணக்கமாய் வருதில்லை (ஆதரி)

தடியரைநாடி வடிதமிழ்பாடி
சஞ்சலத்தாலலுத் தளர்வொன்றோ
கடினமதுநின் சொந்தவடிமை சகியேனெந்தக்
காலமுமுனக்கடைக் கலமென்றோ (ஆதரி)

வாக்கினிலடுத்துப்பாக்கியங்கொடுத்து
மாம்பழக்கவிச் சிங்கமதிதேற்றி
காக்குமறுமுகவா நீக்குததுதகவா
கன்மவஜனமசமிங்மக் கரையேற்றி (ஆதரி)

இராகம்-மாஞ்சு-அல்லது-உசேனி-தாளம்-ரூபகம்.

### பல்லவி.

வடிவே லரசேநான்
வருத்தஞ்சகிக்கமாட்டே னெனரட்சி

### அநுபல்லவி.

அடியேநானுன் னடைக்கலமித்ததி
அஞ்சவிடாதேயையா பழனிப்பதி (வடிவே)

### சரணங்கள்.

அல்லும்பகலும் புண்
ணுருதேபாவிநெஞ் சையோயென்னசெய்வேன்
சொல்லுந்தமியேன் றுதிசெவிகேளாதோ
சும்மாகயடத் தொழிலிதுதானேதோ (வடிவே)

உனதுதயவு என்மே
லுண்டாயிருந்தா லொருதாழ்வுமில்லையே
ஜெனனசாகரத்திற் சுழன்றேபுத்தி
தேறுதயாவேனே திவ்யபராசத்தி (வடிவே)

என்றுந்துணை நீதா
னென்றுதுணிந்தே னெல்லாமுனைச்சார்ந்தே
சென்றிந்திரனிடர் தீர்த்தகுகாமுதிர்
செந்தமிழ்மாம்பழந் தியானித்திடுங்கதிர் (வடிவே)

## இராகம்-தோடி-தாளம்-ஆதி.

### பல்லவி.

ஆதிசரவண பவகுகனேஓம்
அர அர சிவசிவ-ஆதி

### அநுபல்லவி.

சோதிமறைமுடிவின் மீதினயனமிடுந்
தூபரமசுக நேயமுனிவர்புகல் (ஆதி)

### சரணங்கள்.

பந்துஜெனனமர ணந்தனில்வீழும்
பாசமொழிந்துனது பதமலர்தாளுஞ்
சிந்தையுதவியருள் செய்வயல்சூழுந்
திருமருவியசிவகிரி மிசைவாழும் (ஆதி)
மதபொருவினைபுரி விதமிகமீறும்
மயல்விலகிடவரு முயர்கதிதேறும்
அதிகமதியதுதந் தான்விடையேறும்
அரனதுசெவிதனி லொருபொருள்கூறும் (ஆதி)
வந்தனுதினந்தொழு மதுரப்பிரபந்த
மாம்பழந்தமிழின் மகிழுவுமிகுந்த
சுந்தரஞான சொரூபகந்த
துங்ககன்வனசுப மங்களையாய் (ஆதி)

கீதாமிர்தசாரம் - முற்றிற்று.